# ஜனவரி மாதப் பாடப் பகுதிகள்

## இயல் : 7

செய்யுள் : ★ புதுமை விளக்கு

★ திருக்குறள்

★ அறம் என்னும் கதிர் (வாய்மொழி மட்டும்)

உரைநடை : ஒப்புரவு நெறி

துணைப்பாடம் : உண்மை ஒளி

இலக்கணம் : பொது

# செய்யுள் - புதுமை விளக்கு

## I. குறுவினா :

1. பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர் ?

பொய்கையாழ்வார் பூமியை அகல்விளக்காகவும், பூதத்தாழ்வார் அன்பை அகல்விளக்காகவும் உருவகப்படுத்துகின்றனர்.

2. பொய்கை ஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார் ?

பொய்கை ஆழ்வார் தன் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் பாமாலை சூட்டுகிறார்

3. அந்தாதி என்பது யாது ?

ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி என்பர்

## II. புத்தகப் பயிற்சி :

புத்தகப் பயிற்சி பக்க எண் : 130 படிக்க வைத்தல்

## III. சிறுவினா :

புத்தகத்தில் குறித்து கொடுத்து படிக்க வைக்கவும்.

Scanned with OKEN Scanner

# திருக்குறள்

## I குறுவினா :

1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும் ?

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தையும் ஐயம் தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

2. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும் ?

தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய நான்கும் உள்ளதே அரண் ஆகும்.

3. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடாகும். முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு சிறந்த நாடு ஆகாது.

## II புத்தகப் பயிற்சி :

பக்க எண் : 152 - படிக்க வைத்தல்

Scanned with OKEN Scanner

# உரைநடை - ஒப்புரவு நெறி

I **குறுவினா :**

1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது ?

பொருளீட்டுவதை விடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது ?

மற்றவர்களுக்கு வழங்கி மகிழ்வித்து மகிழ வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது ஆகும்.

II **சிறுவினா :**

1, 2 புத்தகத்தில் குறித்து கொடுத்து படிக்க வைத்தல்.

III **புத்தகப் பயிற்சி :**

பக்க எண் : 156 - படிக்க வைத்தல்

Scanned with OKEN Scanner

# துணைப்பாடம் - உண்மை ஒளி

## குறிப்புச் சட்டகம் :

* முன்னுரை
* குருவும் சீடர்களும்
* குருவின் விளக்கம்
* குருவின் பயணம்
* குருவின் நடைப்பயணம்
* குருவின் அன்பு உள்ளம்
* முடிவுரை

## முன்னுரை:

உலக மக்கள் மனதில் எப்போது மனித நேயமும் சகோதர மனப்பான்மையும் வளருகிறதோ அப்போதே அவர்கள் உள்ளத்தில் உண்மை ஒளி பரவும் என்பதே உண்மை அதனை ஜென் கதை வழி அறிந்து உணர்வோம்.

## குருவும் சீடர்களும் :

ஜென் மதகுரு ஒருவர் தமது மாணவர்களுக்குப் பாடம் நடத்துகையில், எல்லா உயிர்களுக்கும் அதன் உணர்வுகளான பசி, தாகம், தூக்கம் ஆகியவை ஒன்றே என்றார். மேலும் இரவும் பகலும், இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதை வாழ்வு என்றார்.. பிறகு மாணவர்களிடம் இருள் போய் வெளிச்சம் வருவது எப்போது உணர்வீர்கள் எனக் கேட்டார்.

## குருவின் விளக்கம் :

மாணவர்கள் தமது கண்ணுக்கு பொருள்கள் புலப்படும் நேரமே இருள் நீங்கி ஒளி பிறந்த நேரம் என்றனர். குரு இல்லை என்று மறுத்துவிட்டு நமது அருகில் இருப்பவனை நமது சகோதரனாக எண்ணும் எண்ணம் தோன்றிய அந்த நொடியே இருள் நீங்கி ஒளி வந்த நேரம் என்று கூறி அனைவரையும் சகோதரராக எண்ண வேண்டும் என்று அறிவுரை கூறினார்.

## குருவின் பயணம் :

குரு குதிரை மீதேறி சிற்றூர் பயணம் மேற்கொண்டார். வழியில் ஒருவன் மயங்கி இருப்பதைப் பார்த்து தண்ணீர் கொடுத்து காப்பாற்றி தமது குதிரையில் ஏற்றி அமர வைத்தார். குரு ஏறுவதற்குள் அவன் குதிரையை விரட்டி அங்கிருந்து விரைந்தான். பிறகு தான் அவன் திருடன் என்பதும் அவன் போட்டது நாடகம் என்பதும் குருவிற்கு புரிந்தது.

## குருவின் நடைப்பயணம் :

குரு நடந்தே ஊரை அடைந்தார். புதிதாக ஒரு குதிரை வாங்க சந்தைக்குப் போன போது அங்கே தமது குதிரையையும் அதைத் திருடிய திருடனையும் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அவனிடம் சென்று குழந்தாய் என்று அழைக்க அவன் அதிர்ச்சி அடைந்தான்.

## குருவின் அன்பு உள்ளம் :

குரு அவனிடம் குதிரையை நீயே வைத்துக் கொள். ஆனால் நடந்ததை யாரிடமும் சொல்லாதே என்றார். உடனே திருடன் தன்னிடம் ஏமாந்ததை அவமானமாக நினைக்கிறார் என்று எண்ணினான். ஆனால் குரு குழந்தாய் நீ இதனை வெளியில் சொன்னால் உண்மையாகவே யாராவது வழியில் மயங்கி கிடந்தாலும் உதவி செய்ய முன் வரமாட்டார்கள் என்றார். திருடன் வெட்கி தலை குனிந்தான்

## முடிவுரை :

தமது சீடர்களுக்கு சகோதரத்துவத்தை உபதேசித்த குரு திருடனைக் கூட மன்னித்து தமது உள்ளத்தின் உண்மை ஒளியை வெளிப்படுத்தினார். எனவே நாமும் பிறரைச் சகோதரராக பாவித்து அவர் தம் குற்றங்களை மன்னித்துப் பெருந்தன்மையோடு நடந்துக் கொள்ள வேண்டும்.

Scanned with OKEN Scanner

# இலக்கணம் - பொது

## I நிரப்புக.

1. திணை உயர்திணை, அஃறிணை என இரண்டு வகைப்படும்
2. ஆறு அறிவுடைய மனிதர்களை உயர்திணை என்பர்
3. பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் ஆகியவற்றையும் உயிரற்ற பொருட்களையும் அஃறிணை என்பர்.
4. பால் ஐந்து வகைப்படும்.
5. ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால்
6. ஒருவருக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால்
7. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால்
8. தமிழில் ஒருமை பன்மை என எண் இரண்டு வகைப்படும்.
9. ஒருவரையோ, ஒன்றையோ மட்டும் குறிப்பது ஒருமை ஆகும்.
10. இடம் மூன்று வகைப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை
11. தன்னைக் குறிப்பது தன்மை. இது தன்மை ஒருமை, தன்மை பன்மை என இருவகைப்படும்.
12. முன்னால் இருப்பவரைக் குறிப்பது முன்னிலை. இது முன்னிலை ஒருமை, முன்னிலை பன்மை என இருவகைப்படும்.
13. தன்னையும், முன்னால் இருப்பவரையும் அல்லாமல் மூன்றாமவரைக் குறிப்பது படர்க்கை ஆகும்.
14. காலம் மூன்று வகைப்படும்.
15. நடந்த செயலைக் குறிப்பது இறந்தகாலம் ஆகும்
16. நடக்கின்ற செயலைக் குறிப்பது நிகழ்காலம் ஆகும்.

17. நடக்கவிருக்கும் செயலைக் குறிப்பது எதிர்காலம் ஆகும்.

18. இரட்டையாக இணைந்து வந்து பிரித்தால் தனிப்பொருள் தராத சொற்களை இரட்டைக்கிளவி என்பர்.

19. ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட முறை தொடர்ந்து வருவதை அடுக்குத் தொடர் என்பர்.

20. அடுக்குத்தொடரில் ஒரு சொல் இரண்டு முதல் நான்கு முறை வரும்.

21. இரட்டைக்கிளவில் சொற்கள் இணைந்து நிற்கும்.

22. அடுக்குத்தொடரில் சொற்கள் தனித்தனியே நிற்கும்.

## III கூறியவாறு செய்க.

1. மாணவன் (பெண்பாலாக மாற்றுக)
   மாணவி

2. பசு (பலவின் பாலாக மாற்றுக)
   பசுக்கள்

3. மாடு மேய்ந்தது (பன்மையாக மாற்றுக)
   மாடுகள் மேய்ந்தன

4. பறக்கும் (நிகழ்காலமாக மாற்றுக)
   பறக்கின்றது.

5. பார்ப்பான் (இறந்தகாலமாக மாற்றுக)
   பார்த்தான்

6. இவள் (படர்க்கையாக மாற்றுக)
   அவள்

7. தங்கை சிரித்தாள் (இத்தொடரை இரட்டைக்கிளவியாக மாற்றுக)
   தங்கை கலகலவெனச் சிரித்தாள்.

Scanned with OKEN Scanner

## II. உதாரணம் தருக.

1. ஒன்றன் பால் - கல்
2. பலர்பால் - மக்கள்
3. பலவின் பால் - நகரங்கள்
4. பெண்பால் - அரசி
5. ஒருமை - மீன்
6. பன்மை - சிறுமிகள்
7. தன்மை ஒருமை - எனக்கு
8. முன்னிலைப் பன்மை - நீங்கள்
9. எதிர் காலம் - ஆடுவாள்
10. இறந்தகாலம் - (பறந்தது)
11. இரட்டைக் கிளவி - கலகல, மடமட
12. அடுக்குத் தொடர் - பிடி பிடி பிடி பிடி

## III. இலக்கணக் குறிப்பு தருக.

1. செல்வன் - ஆண்பால்
2. காலங்கள் - பலவின்பால்
3. நமக்கு - தன்மை பன்மை
4. உனக்கு - முன்னிலை ஒருமை
5. உண்கின்றன - நிகழ்காலம்
6. விறுவிறு - இரட்டைக் கிளவி
7. இல்லை இல்லை - அடுக்குத் தொடர்
8. வந்தனர் - இறந்தகாலம்

## IV. புத்தகப் பயிற்சி : பக்கஎண் : 146 - படிக்க வைத்தல்

Scanned with OKEN Scanner